ஆசிரியர் மோகன்
காசல்பீல்டு தமிழ்ப்பள்ளி

<u>வெற்றி வேற்கை</u>

1. எழுத்தறி வித்தவன் இறைவனாகும்.

2. கல்விக் கழகு கசடற மொழிதல்.

3. பெருமையும் சிறுமையும் தான் தர வருமே.

4. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.

5. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.

6. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

7. கற்கை நன்றே கற்கை நன்றே
   பிச்சை புகினும் கற்கை நன்றே.

எத்தகைய வறுமை நிலையிலும் கல்வி கற்பதை விடலாகாது.

அறிவாளியை மிக உயர்ந்த நிலையில் இருக்கும் அரசரும் விரும்புவார்.

பிழையறப் பேசுவதே கற்ற கல்விக்குச் சிறப்பு.

கல்வியைக் கற்றுகொடுக்கும் ஆசிரியர் கடவுளுக்கு நிகராவார்.

உயர்வும் தாழ்வும் அவரவர் செயலுக்கு ஏற்பவே அமையும்.

அரசர்க்குரிய சிறப்பு , நீதியோடு ஆட்சி நடத்துதல் ஆகும்.

பணக்காரர்களுக்குச் சிறப்பு, உறவினர்களை ஆதரித்தல் ஆகும்.